இறக்குமதி செய்யப்பட்ட
∴ பலவித பரிசுப் பொருட்கள் அழகு சாதனப் பொருட்கள், தையல் வேலைகளுக்குரிய சகல பொருட்கள்.
மற்றும்
∴ யப்பான் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பல தரங்களிலுமுள்ள காதுகேட்கும் கருவிகள் யாவற்றையும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.

கிருபா கிவ்ற் கவுஸ்
KIRUBA GIFT HOUSE
சோதிடவிலாஸ் கட்டிடம்
46, பெரியகடை- யாழ்ப்பாணம்
தொலைபேசி: 8083

பக்கங்கள் 6 விலை சதம் 40

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA
RECEIVED
1979-9-14
PERIODICALS DIVISION
LIBRARY

# ஈழநாடு
# The EELANADU

Registered as a Newspaper at the General Post Office,
Sri Lanka Under No QB/8945/78
கலர் 21 ஆவணி 29 ஷவ்வா 21 இதழ் 214
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 14-9-79

மானிப்பாய் மாணவர்களுக்கோர்
அரிய சந்தர்ப்பம்
பலரின் வேண்டுகோளிற்கமைய
லோகநாதன்
இன்ஸ்ரிரியூட் [கிளை]
மானிப்பாய் வீதி-மானிப்பாய்
(இந்துமகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)
ஆரம்பம் - 19-9-79

## நெல்லுக்கும் மிளகாய்க்கும்
# எவரையும் பாதிக்காத நிலையில்
# உத்தரவாத விலைத்திட்டம்

## மன்னார் மகாநாட்டில் வர்த்தக அமைச்சர் 'லலித்'

[மன்னார்]

**நெல்லுக்கும், மிளகாய்க்கும் எவரையும் பாதிக்காத வகையில் உத்தரவாத விலைகள் நிர்ணயிக்கப்படும் என்று வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.**

மன்னாரிலும், முருங்கனிலும் அமைச்சருக்குச் சிறப்பான வரவேற்பு வைபவங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நேற்று மாலை நடைபெற்ற வர்த்தகர்கள் மகாநாட்டிலும் அமைச்சர் கலந்துகொண்டார். இம்மகாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய மன்னார் எம். பி திரு சூசைதாசன் நெல்லுக்கும் மிளகாய்க்கும் உத்தரவாத விலை நிர்ணயிக்கவேண்டுமென்று அமைச்சரைக் கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் திரு அத்துலத் முதலி உத்தரவாதவிலை நிர்ணயிக்கும்போது உற்பத்தியாளர்களின் நியாயமான இலாபத்தையும் நியாயமற்ற இலாபத்தால் பாவனையாளர்களுக்

[6-ம் பக்கம் பார்க்க]

## "இந்திரா போட்டியிட தடை விதிக்கப்படமாட்டாது"
### சட்ட அமைச்சர் கக்கர் கருத்து

புதுடில்லி, செப் 13

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இடைத்தேர்தலில் போட்டியிட தகுதியற்றவர் எனத் தடை விதிக்கப்படமாட்டாது என்று சட்ட அமைச்சர் திரு. எஸ் கக்கர் தெரிவித்துள்ளார்.

பத்திரிகை நிருபர்கள் மத்தியில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்த திரு. கக்கர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் "வாக்காளரின் விவேகத்திற்கு தீர்மானம் விடப்பட்ட பின்னர் மாருதி கமிஷன் அறிக்கையின் கண்டுபிடிப்புகள் பற்றியும் வாக்காளர்களே தீர்மானிக்க வேண்டும் என்றார்

அரசியல் துறையில் திருமதி காந்தியை எதிர்த்து தமது கட்சி போட்டியிடப் போவதாகவும் திரு. கக்கர் தெரிவித்தார். [கு]

## "எமது கலையை வளர்க்க அரசு முன்வரமாட்டாது"
### எதிர்க்கட்சித்தலைவர் கருத்து

[மட்டுவில்]

"ஈழத்தைப் பொறுத்தளவில் தமிழ் கலைகளின் பொற்காலம் உதயமாகியுள்ளது இக்கால கட்டத்தில் எமது கலைகளை நாமே வளர்க்க வேண்டும். ஆட்சியாளர் இவற்றை வளர்க்க முன்வரமாட்டார்கள். எமது உள்ளூராட்சிச் சபைகளும் எமது கலைகளை வளர்ப்பதில் முன்னோடியாக இருக்க வேண்டும்."

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில், தென்மராட்சி நாட்டியக் கலாலய மாணவியான செல்வி சூரியகலா குமாரசாமியின் பரத நாட்டிய அரங்கேற்ற வைபவத்தில் பேசும்போது கூறினார்.

சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு எஸ். கே திரவியநாயகம் தலைமையில் இவ்வரங்கேற்ற விழா நடைபெற்றது.

திரு. அமிர்தலிங்கம் தமது பேச்சில் தொடர்ந்து கூறியதாவது:-

"நமது ஸ்தலஸ்தாபன சபைகள் தமிழ்க் கலைகளை வளர்ப்பதிலும் முக்கிய கவனம் செலுத்தவேண்டும்.

"அரங்கேற்றம் முடிந்ததும் தமது கலைப்பயிற்சி முடிந்துவிட்டதாகப் பல கலைஞர்கள் முடிவுகட்டிவிடுகிறார்கள். இது தவறு அன்று தமிழ் நாட்டிலிருந்தே ஈழத்திற்கு தமிழ்க் கலைஞர்கள் வரவழைக்கப்பட்டனர் இன்று ஈழம் தமிழ் நாட்டிற்கு ஈடுகொடுத்து நிற்கிறது." [அ]

## யாழ். மாவட்ட அமைச்சர் பெரியாஸ்பத்திரிக்கு விஜயம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாவட்ட அமைச்சர் திரு யூ. பி. விஜயகோன் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு திடீர் விஜயத்தை மேற்கொண்டார்.

வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அமரசிங்கம், மற்றும் வைத்திய நிபுணர்கள், டாக்டர்கள், ஆஸ்பத்திரி ஊழியர்கள் அமைச்சரை வரவேற்று தேவைகளை எடுத்துக் கூறினர்.

அமைச்சர் வார்ட்டுகளுக்கு சென்று நேராக நோயாளிகளின் குறைகளை அறிந்துகொண்டார்.

ஆஸ்பத்திரியில் மருந்துத் தட்டுப்பாடு இருப்பதாகவும், நர்சுகள் பற்றாக்குறையாக இருப்பதாகவும் அமைச்சரிடம் எடுத்துக் கூறப்பட்டது.

ஆஸ்பத்திரி தேவைகள் பற்றி தமக்கு ஒரு பட்டியல் தயாரித்து அனுப்பிவைக்குமாறும், உடன் நடவடிக்கை எடுப்பதாகவும், மாவட்ட அமைச்சர் உறுதியளித்தார். [ச]

## மேற்கு ஜப்பானில் ஜனாதிபதி

டோக்கியோ, செப் 13

ஜப்பானில் ஆறு நாள் விஜயத்தை மேற்கொண்டிருக்கும் இலங்கை ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜயவர்த்தன தமது விஜயத்தின் இறுதிக் கட்டமாக ஜப்பானின் மேற்குப் பகுதிக்கு இன்று டோக்கியோவிலிருந்து புறப்பட்டார்.

டோக்கியோவிலிருந்து 2 ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள புனித நகரமான நராவுக்கு இன்று விஜயஞ்செய்யும் ஜனாதிபதி சனிக்கிழமை ஒசாக்காவிலிருந்து புறப்படுவார் [கு]

### கருணாநிதி-எம். ஜி. ஆர். சந்திப்பு
# கட்சிகள் ஒன்றிணைவதுபற்றி ஆலோசனை நடத்தினர்கள்
## பொதுச்சபைகளே இறுதி முடிவெடுக்கும்

சென்னை, செப் 13

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம் ஜி இராமச்சந்திரனும் எதிர்க்கட்சித் தலைவர் திரு மு கருணாநிதியும் சென்னையில் சந்தித்து அ. தி. மு. கவும் தி.மு கவும் ஒன்றிணைவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆலோசனை நடாத்தினார்கள்.

சென்னையிலுள்ள அரசு விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற இச் சந்திப்பு 45 நிமிட நேரம் நீடித்தது

இரு கட்சித் தலைவர்களையும் ஒன்று சேர்ப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி மத்திய உணவு, விவசாய அமைச்சர் திரு. பிஜு பட்நாயக் இரு தலைவர்களையும் தனித்தனியே நேற்றும் இன்றும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியதன் பயனாலேயே இச் சந்திப்பு இடம் பெற்றது

இச் சந்திப்பின் பின்னர் திரு இராமச்சந்திரனும் திரு. கருணாநிதியும் கருத்துத் தெரிவிக்கையில் இரு கட்சிகளும் ஒன்றிணைவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றியே தாம் ஆலோசித்ததாகவும் இரு கட்சிகளினதும் பொதுச்சபை, செயற்குழுவே இதுபற்றி இறுதி முடிவெடுக்கும் என்றும் தெரிவித்தனர்.

இச் சந்திப்புப்பற்றி பத்திரிகை நிருபர்கள் கேட்ட கேள்வியொன்றுக்கு அமைச்சர் திரு பட்நாயக் பதிலளிக்கையில் கூறியதாவது:

"இரு தலைவர்களும் திறமைசாலிகள். சரியான முடிவொன்றையே எடுப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

இரு கட்சிகளையும் ஒன்றிணைப்பதற்கான முயற்சியின் பொருட்டு நான் மீண்டும் சென்னைக்கு வரவேண்டிய அவசியமேயில்லை இவ்வாறு அமைச்சர் கூறினார்.

திரு. கருணாநிதி தலைமையிலான திமுகவிலிருந்து திரு. எம். ஜி. இராமச்சந்திரன் பிரிந்து சென்று புதிய கட்சி அமைத்த பின்னர் இரு கட்சிகளும் ஒன்று சேர்வதற்கான முயற்சியில் இரு தலைவர்களும் ஈடுபடுவது இதுவே முதல் தடவையாகும். [ட]

## கேள்வி விளம்பரம்

4000 வெற்றுச் சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்குண்டு.

எம்முடன் 23-09-79க்கு முன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்.

புலோலி பலநோக்கு கூ. சங்கம்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.
1979-09-11. 3581

ஜனாதிபதி பிறந்த தினத்தில்

# யாழ்மாவட்ட பாடசாலைகளில் மரம் நடும் இயக்கம்

[உடுப்பிட்டி]

ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தன பிறந்ததினமான எதிர்வரும் 17ம் திகதி யாழ் மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளிலும் மரம் நாட்டும் இயக்கம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது

இம் மரம் நாட்டும் இயக்கத்தைப் பாடசாலை அதிபர்கள் ஆரம்பித்துவைப்பார்கள்.

அன்றையதினம் பாடசாலை வளவுகளில் நடுவதற்கென பனை, தென்னை, மா, பலா, தேக்கு, சஞ்சீவி, சவுக்கு, மலைவேம்பு, எலுமிச்சை, கொய்யா, பரலுந்திரிகை கொடிமுந்திரிகை, நெல்லி போன்ற மரங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன

பாடசாலைகளில் நாட்டுவதற்குத் தேவையான பூமரக்கன்றுகளை திருநெல்வேலி அரசடைப்பண்ணையிலும் வனமரக்கன்றுகளை களிநொச்சியில் உள்ள வனமரங்களுக்கான நாற்று மேடைகளிலும் பெற்றுக்கொள்வதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

பழமரங்களையும் வனமரங்களையும் பாடசாலைகளில் நாட்டுவதனுல் பாடசாலைச் சூழல்களை ஸ்திரப்படுத்தவும் நிழலைவழங்கவும் பயனைப் பெறவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

எதிர்வரும் 17ம் திகதி பாடசாலைகளில் விசேட நிகழ்ச்சிகளை நடத்தவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. [க]


உ
ஓம் சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் சித்தார்த்தி வருடம் ஆவணி 30ந் திகதி (15-9-79) சனிக்கிழமை நண்பகல் 2-05 மணி முதல் 3-04 மணி வரை, தசமியோேயும் புனர்பூசம் நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த நல்லோரையில்

| எங்கள் புத்திரன், திருநிறைச் செல்வன் | எங்கள் புத்திரி திருநிறைச்செல்வி |
|---|---|
| அருளானந்தம் | நகுலாதேவி |
| அவர்கட்கும் | அவர்கட்கும் |
| காரியாலயஉதவியாளர் ஈழநாடு யாழ் | |

முருகப்பெருமான் திருவருளால் நந்தாவில் அம்பாள் ஆலய முன்றலில் நிகழவிருக்கும் திருமண வைபவத்திற்கு சுற்றஞ்சூழ வருகை தந்து மணவிழாவைச் சிறப்பித்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்

| | |
|---|---|
| க. முருகேசு தம்பதிகள் | த. துரையப்பா தம்பதிகள் |
| (இளைப்பாறிய அரசினர் ஆசிரியர்) | (இளைப்பாறிய உத்தியோகத்தர்) |
| இல; 2, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். | நவரத்தினராஜா வீதி, கோண்டாவில்மேற்கு |

(3582)


## பத்தாயிரம் டொலர் உதவி

[சுழிபுரம்]

''இளைஞர்தான் ஒரு நாட்டின் முதுகெலும்பாகும் ஒரு கிராமத்தை முன்னேற்றுவது இளைஞரின் கடமையாகும்''

இவ்வாறு பண்ணாகம் கிராமத்தில் பாதையெரிப்பித்து திருத்தும் வேலை ஆரம்பவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய வட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு தா திருநாவுக்கரசு குறிப்பிட்டார்

தேசிய இளைஞர் மன்ற இயக்குனர் திரு எஸ் கனகசூரியர் பேசுகையில் கூறியதாவது? திட்டங்கள் பல தீர்மானிக்கலாம் ஆனல் அவற்றை செயல்படுத்துவதில் தான் அதன் பலாபலன் தங்கி இருக்கின்றது இன்று இங்கு ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டத்தினுல் கிராம முன்னேற்றமும் வேலையில்லாப்பிரச்சினையும் சற்று நீங்கும் என்று நினைக்கின்றேன் ஆசிய தேசிய இளைஞர் மன்றம் பத்தாயிரம் டொலரை இலங்கை தேசிய இயக்கத்திற்கு தந்துஉதவிஇருக்கின்றது இவற்றை நாம் இந்த நாட்டின் நல்விருத்திக்கு நன்கு பயன்படுத்துவோம்.

சுழிபுரம் கிராம சபை விசேட ஆணையாளர் திரு எஸ் ஞானபாஸ்கரன் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. [க]

## தீவுப்பகுதிக்கு தண்ணீர் தாங்கிகள் விரைவில் வரும்

### பண்டிதர் தகவல்

[யாழ்ப்பாணம்]

புங்குடுதீவு ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் தண்ணீர் விநியோகம் செய்வதற்கான தண்ணீர் தாங்கி லொறிகள் இன்னும் சில தினங்களில் தீவுப்பகுதிக்கு வந்து சேரும் என உள்ளூராட்சிவீடமைப்பு நிர்மாண, துறை அமைச்சின் செயலாளர் திரு' ஆர் பாஸ்கரலிங்கம் தமக்கு கடிதம் எழுதியுள்ளதாக ஊர்காவற்றுறை எம் பி பண்டிதர் கா பொ இரத்தினம் எமது நிருபரிடம் தெரிவித்தார்.

தண்ணீர்தாங்கி லொறிகளை உடன் அனுப்புமாறு தாம் எழுதிய கடிதத்திற்கு எழுதியுள்ள பதில் கடிதத்திலேயே திரு பாஸ்கரலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளதாகவும் பண்டிதர் கூறினர்

2 தண்ணீர்தாங்கி லொறிகள் பதிவுசெய்யப்பட்டு உத்தரவு சீட்டு அளிக்கப்பட்டுள்ளது, என்றும் இன்னும் சில நாட்களில் உரிய இடத்திற்கு அனுப்பபடுமென்றும் தேசிய நீர்வள வடிகால் அமைப்பு பொதுமுகாமையாளர் தமக்கு அறிவித்துள்ளதாகவும் திரு. பாஸ்கரலிங்கம் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (இ)

## இராணுவ 'சார்ஜன்ட்' நஞ்சருந்தித் தற்கொலை

[சங்கானை-டண்டத்தரிப்பு]

பலாலி இராணுவமுகாமைச் சேர்ந்த இராணுவ சார்ஜன்ட் ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலைசெய்து கொண்டார்.

இச்சம்பவம் இல்லாலையில் நடைபெற்றுள்ளது.

இருபிள்ளைகளின் தந்தையும் இராணுவமுகாம் களஞ்சிய அறைப் பொறுப்பாளியும் அண்மையில் ஒய்வுபெற இருந்தவருமான எஸ். அலெக்ஸ்சாண்டர் [வயது 45] என்பவரே நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

இதுபற்றி பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளதாவது! அலெக்ஸ்சாண்டரின் மேலதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து இராணுவ பொலிசார் சங்கானை பொலிசாரின் உதவியுடன் இல்லாலையில் உள்ள அவரின் வீட்டிற்குச் சென்றனராம்

வழியில் சைக்கிளில் வந்துகொண்டிருந்த அலெக்ஸ்சாண்டரை சந்தித்த பொலிசார் விடயத்தை தெரிவிக்கவே, 'சரிவாருங்கள் வீடு போகலாம் நான் சைக்கிளில் வருகிறேன் நீங்கள் ஜீப்பில் என்னை பின்தொடருங்கள் எனக்கூறி அவர் முன்சென்றாராம்.

ஜீப்செல்லமுடியாத இடமொன்றில் ஜீப்பை நிறுத்திவிட்டு வாருங்கள் என பொலிசாரிடம் தெரிவித்துவிட்டு சிறிய பாதையில் அவர் சைக்கிளில் வேகமாக சென்று தனது வீட்டையும் கடந்து சைக்கிளை விட்டுவிட்டு மறைந்துவிட்டார்.

பின்தொடர்ந்த பொலிசார் அலெக்ஸ்சாண்டரை நச்சுத்திரவகப் போத்தல் ஒன்றுடன் பிடித்தபோது தாம் அத்திராவகத்தை குடிக்கவில்லை என்றும் அதனை தமது முகத்தில் மட்டுமே பூசியுள்ளதாகவும் கூறினாராம்.

அலெக்ஸ்சாண்டரின் பேச்சிலும் அவர்நிலையிலும் சந்தேகம் கொண்ட பொலிஸ் சார்ஜன்ட் திரு குலரத்தின மற்றவர்களின் உதவியுடன் சங்கானையில்உள்ள தனியார்மருத்துவமனை ஒன்றில் அவரை அனுமதித்தனர் அங்கு அவர் மரணமானர்.

மரண விசாரணை அதிகாரி டாக்டர் அப்போன்ஸ் அத்தனையார் விசாரணை நடத்தினர். இறந்தவரின் மனைவி திருமதி பேணடெற் அலெக்ஸ்சாண்டர் இறந்தவரின் மைத்துனர் பிறின்ஸ் சந்தசாமி லான்ஸ் கோப்ரல் தல்ஹா கொட, டாக்டர் நாகநாதன் ஆகியோரும் சாட்சியமளித்த பின் தற்கொலை எனதீர்ப்பளிக்கப்பட்டது. (இ)

## ஆஸி-இந்திய வீரர்களின் சாதனை!

(சென்னை)

இந்திய, அவுஸ்திரேலிய 1வது கிரிக்கட்டெஸ்டின் முதல் இனிங்ஸில் ஆஸ்திரேலிய கோஷ்டி சகலவிக்கட்டுகளையும் இழந்து 390 ஓட்டங்களைப் பெற்றது.

அடுத்து ஆடிய இந்தியா நேற்றைய ஆட்டநேரமுடிவில் 1 விக்கட் நஷ்டத்திற்கு 80ஓட்டங்களைப் பெற்றிருந்தது. காப்டன் கவாஸ்கரும் விக்கட் கீப்பர் கிருமானியும் ஆட்டமிழக்காமல் ஆடிக்கொண்டிருந்தனர்.

ஆஸ்திரேலியாவின் ஆரம்ப துடுப்படி வீரர் அலன்போடர் 162 ஓட்டங்களைப் பெற்று ஒரு சாதனையை நிலை நாட்டினர்.

வெளிநாட்டு கோஷ்டிவீரர் ஒருவர் சென்னை மைதானத்தில் பெற்ற ஆகக்கூடுதலான மொத்த ஓட்டம் இதுவே ஆகும்.

ஆஸ்திரேலிய காப்டன் கிம்ஹியூஜஸ் 100 ஓட்டங்களைப் பெற்றார்.

### இந்திய இளம்வீரரின் சாதனை!

இந்திய இளம் சுழல் பந்து வீச்சு வீரரான டிலிப் டோஷி தாம் ஆடிய முதல் டெஸ்டிலேயே 6 விக்கட்டுகளைக் கைப்பற்றி சாதனை நிலைநாட்டினர். 6 விக்கட்டுகளுக்கும் அவர் 103 ஓட்டங்களைக் கொடுத்தார்.

ஆட்டம் இன்று வெள்ளிக்கிழமை தொடர்ந்து நடைபெறும் நேற்றுவியாழக்கிழமை ஓய்வுநாளாகும். (இ)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழ இல. ஈஜ/14218

1. வயிரவி கதிரவேலுவும் பெண்
2. மகேஸ்வரி இருவரும் கோல்லங்கலட்டி

வாதிகள்

எதிராக

1. முருகன் கிருஷ்ணன், மாவிட்டபுரம்.
2. முருகன் மாம்பெண் மீனாட்சி
வீமன்காமம், தெல்லிப்பழை.

பிரதிவாதிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் M B/14218-ம் இலக்க வழக்கில் எனக்கு கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்க படும் இரு துண்டுக் காணிகளையும் 1979-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 9-ந் திகதி செவ்வாய்க்கிழமை (9-10-1979) காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த பிரதிவாதிகள் குறித்த வாதிகளுக்கு ரூபா 2634/48வும் மேலும் ரூபா 2000/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு 16 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1973-ம் ஆண்டு மார்கழி மாதம் 3-ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1976 ம் ஆண்டு பங்குனி மாதம் 5-ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 530/10 கொடுக்கவேண்டியிருப்பதாலும். (இதில் கொடுக்கப்பட்ட தொகை ரூபா 1300/-)

### ஆதனவிபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிவிசனில் வலிகாமம் வடக்குப்பகுதி தெல்லிப்பழை கோவிற்பற்று வலிகாமம் இறை "பேதுவலட்டி" அல்லது "வேறுவலட்டி" உலாந்தா எனும் ஏராம்பரம் 15 10-57-ந் திகதி இல 73ம் இடப்பட்ட படத்தில் 2 ஏ இலக்கத்துண்டாகிய நிலப்பரப்பு ஒன்பதும் குளி நாலொடு பத்தில் நாலும் (நி ப. 9 குளி 4 4/10ம்) இதில் கிழக்குப் புறமாக சீதனம் கொடுத்த நிலப்பரப்பு 5 நீக்கி மிகுதி மேற்குப்புறமாக நிலப்பரப்பு நாலும் குளி நாலோடு பத்தில் நாலும் (நி. ப. 4 குளி 4 4/10) இதற்கு எல்லை கிழக்கு இராசன் பெண் சரஸ்வதியின் ஆதனம், வடக்கு ஐயன் கந்தனின் ஆதனம் மேற்கு நாகன் வட்டனின் ஆதனம், தெற்கு ஐயன் கந்தனின் ஆதனம் இதடங்கலும். மேற்படி படத்தில் 7ம் துண்டாகக் காட்டப்பட்ட 10 அடி அகலப் பாதையின் பாவிப்புரித்தும்.

2 மேற்படி இறை "தம்பகத்தனை" நில. பர 3 இதில் தெற்குப் பக்கமாக நன்கொடை அளித்த நில பர. $1\frac{1}{2}$ நீக்கி மிகுதி வடக்குப் பக்கமாக நில பரப்பு $1\frac{1}{2}$. இதற்கெல்லை கிழக்கும் வடக்கும் கந்தன் தாமோதரம்பிள்ளையின் ஆதனம் மேற்கு ஐயன் கந்தனின் ஆதனம், தெற்கு இராசன் பெண் சரஸ்வதியின் ஆதனம் இதடங்கலும் இதன் வடக்கெல்லை காணியில் உள்ள கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் உரித்தும்

சி. செ. பாலசிங்கம்,
கொமிஷனரும் மதிப்பாளரும்.

அராலி வடக்கு
வட்டுக்கோட்டை
8-9-1979 3569

## 'ஈழநாடு' வெற்றிக்கிண்ண கிரிக்கட் கால்-அரை இறுதி ஆட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

"ஈழநாடு" வெற்றிக்கிண்ணத்துக்காக "நொதேர்ன் ஸ்போட்ஸ்" சஞ்சிகையின் ஆதரவில் நடைபெறும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் கால் இறுதி, அரை இறுதி ஆட்டங்கள் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் யாழ் செங்குந்தா மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறுகிறது

இந்த ஆட்டங்களில் கலந்துகொள்ளும் கோஷ்டிகளின் விபரம் வருமாறு!

யாழ் இன்வின்சிபிள் வி. க. — யாழ் வோக்ட் சிறீன் வி. க., குரும்பசிட்டி உதயதாரகை வி. க. — சுன்னாகம் லெவன் ஸ்டார் வி. க., யாழ் வெளி மாவட்ட வி. க. — யாழ் ஒலிம்பிக்ஸ் ஃபயர் வி. க., அரியாலை வி. க. — சென்தல் வி. க, யாழ் மேற்கிந்திய குழு — நல்லூர் ஹாபீட் சோபர்ஸ் கிரிக்கட் குழு. [இ]

# போலித்துப்பாக்கி முனையில் விமானம் கடத்தல்!

## கடத்தல்காரர் சரண்: புத்திசுவாதீன மற்றவராம்

பிரங்பர்ட், செப். 13

விளையாட்டுத் துப்பாக்கி யைக் காட்டி மேற்கு ஜெர்மன் விமானம் ஒன்றைக் கடத்திய ஒருவர் 12 மணி நேரம் ஜெர்மன் அமைச்சர் ஒருவருடன் பேச்சு நடத்தியின்னர் கோலான் விமானநிலையத்தில் பொலிசாரிடம் சரணடைந்தார்.

பிராங்பர்ட்டுக்கும் கோலானுக்குமிடையே உள்ளூர் சேவையில் ஈடுபட்டிருந்த இவ் விமானத்தில் இருந்த 128 பிரயாணிகளையும் அந்த நபர் விமானத்திலுள் பணயம் வைத்திருந்தார்.

30 வயதுடைய ஜெர்மனியரான இவர், புத்திசுவாதீன மற்றவர் என்றும் தெரிவிக்கப் பட்டது.

விமானக் கடத்தலைத் தடுக்கும் கொரில்லாக்களின் எதிர் நடவடிக்கைக்கு தயார்செய்யும்வேளையிலேயே இவர் சரணடைந்தாராம். (இ)

## ‘‘ஏர் - உழவர்’ சின்னம் இப்போது ஜனதாவுக்கே’

### தேர்தல் ஆணையாளர் விளக்கம்

புதுடில்லி, செப். 13

ஜனதா கட்சியின் ஏர்-உழவர் தேர்தல் சின்னத்தை ஜனதா கட்சிக்கா அல்லது ‘ஜனதா-எஸ்’ கட்சிக்காவழங்குவது என்பது குறித்து தேர்தல் கமிஷன் முடிவு செய்யும் வரை அச்சின்னத்தை ஜனதா கட்சியே வைத்திருக்கலாம்.

இவ்வாறு இந்திய தலைமை தேர்தல்கமிஷனர் திரு. சக்தர் நிருபர்களிடம் கூறினார்.

திரு ராஜ் நாராயண் தலைமையிலான ‘ஜனதா-எஸ்’ கட்சி தன்னை ஒரு அரசியல் கட்சியாக அங்கீகரிக்குமாறு தேர்தல் கமிஷனுக்கு மனுச் செய்துள்ளதாகவும் அவர்கூறினார். (இ)

## ‘‘கற்பனைக் கேள்வி!’’

புதுடில்லி, செப். 13

‘‘மாருதி கமிஷன் குற்றச்சாட்டின் அடிப்படையில் முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப் படமாட்டாரா?’’ என்பது ஒரு கற்பனையான கேள்வி.

இவ்வாறு இந்திய தலைமைத்தேர்தல் கமிஷனர் திரு. சக்தர் பத்திரிகை நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்குப்பதிலளிக்கையில் கூறினார். (இ)

## மலேசியா பயணம்

(யாழ்ப்பாணம்)

வில்லிசைக் கலைஞரும், சமயத் தொண்டருமான கலைமணி சு. வடிவேல் மலேசியாவிலுள்ள பல சமய ஸ்தாபனங்கள் சமயப் பெரியார்களின் அழைப்பின் பேரில் கடந்த 29-ந் திகதி மலேசியா பயணமானார்.

மலேசியாவில் இவர் சங்கீத கதாகாலாட்சேப நிகழ்ச்சிகளும், வில்லிசை நிகழ்ச்சிகளும் நடாத்துவார். (வ)

## இலவச சட்ட உதவி நிலையம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நீதிமன்றக் கட்டிடத்தில் அமைந்துள்ள இலவச சட்ட உதவிநிலையத்தை இன்று வெள்ளிக்கிழமை காலை யாழ் மேல்நீதிமன்ற நீதிபதி ஜனாப் எம் ஜமீல் திறந்துவைப்பார். (கொ)

# இந்திராவுக்கு எதிராக சட்டம் இயற்ற சரண்சிங் அரசுக்கு அதிகாரம் இல்லை

## ஜெகஜீவன்ராம் கருத்து

புதுடில்லி, செப். 13

மாருதி விசாரணைக் கமிஷன் அறிக்கையின் அடிப்படையில் திருமதி இந்திரா காந்தியை எதிர்வரும் தேர்தலில்போட்டியிடாமல் தடைசெய்ய அவசர சட்டம் எதையும் நிறைவேற்றும் அதிகாரம் இன்றைய அரசுக்கு கிடையாது.

இவ்வாறு ஜனதாக்கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு ஜெகஜீவன்ராம் தெரிவித்துள்ளார்

புதுடில்லியில் பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

லோகசபையை எதிர்நோக்காத திரு. சரண்சிங்கின் அரசினால் இது போன்ற நிலையில் அவசரசட்டம் எதையும் இயற்றமுடியாது என்றும் திரு ஜெகஜீவன்ராம் கூறினார். (இ)

## மலேஷியாவில் 60 ஆயிரம் வீதிவிபத்துக்கள்

கோலாலம்பூர், செப். 13

மலேஷியாவில் கடந்த ஆண்டு 60 ஆயிரம் மோட்டார் வாகன விபத்துக்கள் இடம் பெற்றுள்ளன. இவ் விபத்துக்களில் 1730 பேர் பலியானினர்; 27 ஆயிரம் பேர்காயமடைந்தனர்.

மலேஷிய வீதிகளில் இப்போது 20 லட்சம் வாகனங்கள் ஓடுகின்றன. 1969ம் ஆண்டு இங்கு 6 லட்சம் வாகனங்கள் மட்டுமே இருந்தன

இத்தகவலை மலேஷிய போக்குவரத்து அமைச்சர் திரு. மாணிக்கவாசகம் தெரிவித்தார்.

பொருளாதாரம்அபிவிருத்தி அடைந்ததன் காரணமாகவே வாகனங்கள் அதிகரிக்கப்பட்டு வீதி விபத்துக்களும் அதிகரித்துள்ளன என்றும் அவர் கூறினார். (இ)

## இந்திய இடைக்காலத்தேர்தல்: 6 தேசிய 12 மாநில கட்சிகள் கமிஷனரை சந்தித்தன

புதுடில்லி, செப். 13

இந்திய இடைக்காலதேர்தல் குறித்து அரசியல் கட்சிகள் நேற்று தலைமைத் தேர்தல் ஆணையாளருடன் பேச்சுநடத்தின

6 தேசியக் கட்சிகளும் 12 மாநிலக்கட்சிகளும் இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டன.

அரசின் சாதனைகளைத் தெரிவிக்கும் விளம்பரங்கள் எதையும் அரசு வெளியிடக்கூடாது. சகலகட்சிகளும் இக்கலந்துரையாடலின்போது கேட்டுக் கொண்டன.

தேர்தல் பிரசாரத்திற்காக வானொலியையும் தொலைக்காட்சியையும் பாவிப்பதற்கு சகல கட்சிகளுக்கும்சமவாய்ப்பு அளிக்கவேண்டுமென்றும்கட்சிகள் கோரிக்கை விடுத்தன.

இவை குறித்து தாம் அரசுடன் தொடர்பு கொள்வதாகவும் ஆணையாளர் திரு. சக்தர் கட்சித்தலைவர்களிடம் உறுதியளித்தார்.

சகல கட்சிகளும் தேர்தலை அமைதியுடனும் ஒழுங்காகவும் நடத்தஒத்துழைப்பளிப்பதாக வாக்குறுதி அளித்துள்ளன என தேர்தல் கமிஷனர் நிருபர்களிடம் பின்னர் கூறினார். (இ)

(உடுப்பிட்டி)

கல்விப் பொதுத் தராதர உயர்தரவகுப்பு மாணவர்களின் வசதியை முன்னிட்டு யாழ் மறைக்கல்வி நிலையம் வேதசமய வகுப்புக்களை நாளை தொடக்கம் நடத்தவுள்ளது

## சர்வதேசக் குழந்தைகள் ஆண்டை ஒட்டி யாழ். றோட்டறிக் கழகம் அளிக்கும்

### சுகாதாரக் கல்வி - பாடசாலைகளுக்கான பரிசுப்போட்டி

பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடைகளின்கீழ் கோடிடவும்.

[1] உலகத்தில் அண்மையில் முற்றாக அகற்றப் பட்ட தொற்றுநோய் எது?
அம்மை-கொப்பளிப்பான் - சின்னமுத்து - மலேரியா.

[2] முக்கூட்டுத் தடுப்பு ஊசிமூலம் குழந்தைகளுக்கு வராது தடுக்கக்கூடிய நோய்கள் எவை?
தொண்டைக்கரப்பன்-இளம்பிள்ளை வாதம்-காசநோய் ஏற்பு - எலும்புருக்கி.

[3] முதல் ஆறுமாதங்களுக்குச் சிசுக்களுக்கு ஏற்ற சிறந்த பால் எது?
பசுப்பால் - தாய்ப்பால் - சோயா அவரைப்பால்.

[4] மிருகங்களில் இருந்து மனிதருக்குத் தொற்றும் நோய்கள் எவை?
அம்மை - நெருப்புக் காய்ச்சல் - சொக்லைநோய்

[5] நுளம்பினால் தொற்றப்படும் நோய்கள் எவை?
டெங்குக்காய்ச்சல் - ஏற்பு - காசநோய் - யானைக் கால்நோய் -மலேரியா.

[6] சந்ததி வழியாகவரும் நோய்கள் எவ்வாறு பெற்றோரிடமிருந்து குழந்தைகளை அடைகிறது?
பெற்றோரிடமிருந்து தொற்றுதல்மூலம் - சந்ததிச் சுவடுகள் மூலம்.

[7] இலங்கையரின் உணவுவகைகளில் எந்தச்சத்துக் குறைவாகக் காணப்படுகிறது?
கொழுப்புச் சத்து— மாச்சத்து புரதச்சத்து.

[8] உயிர்ச்சத்து ‘ஏ’ கூடுதலாக உள்ள பொருளைக் கூறுக?
வல்லாரை - சோயா அவரை -இறைச்சி-பால்.

[9] மிதப்புள்ள பற்களுக்கு ‘கிளி’ப்போட்டு அழகு செய்ய உகந்த வயது எது?
11 - 13 வரை; 14 - 16 வரை; 18 - 20 வரை.

[10] ஆரோக்கியமான பற்களுக்குத் தேவையான வைட்டமின் சத்துக்கள் எவை?
‘ஏ’—‘பி’—‘ஸி’—‘டி’—‘ஈ’

பகுதி II

பின்வரும் கேள்விகளுக்கு ‘‘ஆம்’’ அல்லது ‘‘இல்லை’’யென்று விடையளிக்கவும்.

[1] பாலில் உள்ள புரதச்சத்து கசிலான் ( )

[2] ஏழைகள் தங்கள் புரதச்சத்தை அரிசியில் இருந்து பெறுகிறார்கள் ( )

[3] இரத்ததானம் செய்வதால் ஒருவரின் உடம்புக்குக் கெடுதல் ஏற்படுமா? ( )

[4] தெருவிபத்தில் காயமுற்ற உடனே ஏற்புவலி தடுப்பூசி போடுவித்தல் வேண்டுமா? ( )

[5] கர்ப்பிணிகள் ஏற்புத் தடுப்பூசி போடுதல் கூடாதா? ( )

[6] குழந்தைகளுக்கு ஏற்படும் கிரந்தை மாற்றாது விட்டால் இருதயம் முதலிய உறுப்புகளைப் பாதிக்குமா? ( )

[7] வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைக்குக் கூடுதலாகத் தண்ணீர்ப் பதார்த்தங்கள் கொடுப்பது தவறு? ( )

[8] ‘பயோறியா’ என்று கூறப்படும் பல் இழைய நோயை ஆரம்பத்தில் பல் வைத்தியத்தினால் மாற்றமுடியுமா? ( )

[9] பற்சூத்தை ஒரு பல்லிலிருந்து மற்றைய பற்களுக்குத் தொற்றும் தன்மையுடையதா? ( )

[10] ஒவ்வொரு சாப்பாட்டிற்கும் பின்பு பற்களைத் துலக்குதலே சிறந்தபற்பாதுகாப்பு ஆகுமா? ( )

பகுதி III

பின்வரும் கேள்விகளுக்குத் தகுந்தவிடைதருக:

[1] குழந்தை பிறந்தவுடன் ஏன் அழுகிறது?

[2] தொற்றுநோய் பரவும் வழிகளை நிரைப்படுத்திக் கூறுக? ஒவ்வொன்றுக்கும் இரு உதாரணங்களைக் கூறுக?

[3] பின்வரும் தொற்று நோய்களுக்கு நீங்கள் எடுக்கவேண்டிய பாதுகாப்பு என்ன?
(i) மலேரியா
(ii) காசநோய்
(iii) வயிற்றோட்டம்

[4] பின்வரும் ஆபத்தான கட்டங்களில் நீங்கள் செய்யக்கூடிய முதலுதவி என்ன?
(i) வலிப்பு நோயால் அவஸ்தைப்படும் ஒருவருக்கு-
(ii) விடப்பாம்பினால் கடியுண்ட ஒருவருக்கு-
(iii) நீரில் மூழ்கித் தத்தளிப்பவருக்கு-

[5] வயிற்றில் வளரும் பூச்சிகளில் முக்கியமான மூன்றைக் கூறுக? அவற்றைத் தடுப்பதற்குச் சிறந்த வழிகள் எவை?

[6] உங்கள் வீட்டில் இருக்கும் கைக்குழந்தைக்குப் பால் பருக்கும்பொழுது ‘பிரக்கடித்து’ மூச்சுத் திணறினால் என்ன செய்வீர்கள்?

[7] காதுக்குள் சிறு பூச்சிசென்று இரைச்சல் செய்தால் உடனடியாக நீங்கள் என்ன செய்வீர்கள்?

[8] வெண்மையான - ஆரோக்கியமான பற்களைப் பெறுவதற்கு குழந்தைகள் எடுக்கவேண்டிய பாதுகாப்பு எவை?

[9] பிள்ளைகள் தொடர்ந்து விரல் சூப்புவதை சுலபமாகத் தடுப்பதற்கு பல்வைத்தியத்தில் இடம் உண்டா?

[10] உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருக்க மாணவர் கைக்கொள்ளவேண்டியது யாது?

(5ம் பக்கம் பார்க்க)

**வெஸ்லி**
மாணிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி-சாவித்திரி
**கற்புக்கரசி**

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
முத்துராமன்
சுஜாதா
**பேரும் புகழும்**

**ராஜா** யாழ் நகர்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சாவித்திரி
நடித்த
**காத்திருந்தகண்கள்** (புதிய பிரதி)

**REGAL** (Jaffna)
Daily at 2-00 4-30, 7-00 & 9-30p m. only
Special Shows Saturday & Sunday 10-30, a. m
MICHAEL YORK in
M. G. M. Presents
**"LOGAN'S RUN"**
Color-Thriller

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
**ஸ்ரீதர்** போன் 7345 தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) 10-30, 2-30, 6-15, 9-45
ஜெய்சங்கர்-வாணிஸ்ரீ ஆதித்தன்-தங்கவேலு
நடித்த
**காதல் படுத்தும்பாடு**
(புத்தம் புதிய பிரதி)
ரி. ஆர். பாப்பாவின் இசை
உங்களை மகிழ்விக்கும் காதுக்கினிய கீதங்கள் - மயிர்க்கூச்செறியும் சண்டைக் காட்சிகள்-வயிறுகுலுங்க சிரிக்க வைக்கும் நகைச்சுவை யாவும் நிறைந்த படம்.

**வின்ஸர்** யாழ்ப்பாணம் (தென்னிந்திய நடிகர்)
தினசரி 4 காட்சிகள்
காலை 10-30, பி.ப 2-30,
மாலை 6-30, இரவு 9-30
(கோமாளிகள் புகழ்)
எஸ். வி. சுப்பையா, ஜெயா, மீரா, ராம்தாஸ்
உதயகுமார்
நடித்த
**மாமியார் வீடு**
தயாரிப்பு-டைரக்ஷன் கே வெங்கட்

A Grand Release
**SHANTHI** JAFFNA PHONE 7642
Daily 0-30, 2-30, 4-45, 7-00, 9-30 p.m
The one thing people hate more than a Cop Killer... Is the lawyer who gets him off
M G. M presents DEAN MARTIN in
**MR. RICCO**
Color - Scope
Another Action Packed Movie!
Don't Miss This !

**மனோகரா** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30 6-30, 9-45
N. T. ராமராவ் — சரோஜாதேவி
**சீதாராம கல்யாணம்**
(புதிய பிரதி)
(சிறந்த புராணப் படம்)

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா
நாகேஷ் நடித்த
**பட்டணத்தில் பூதம்**
(புதிய பிரதி)

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-வாணிஸ்ரீ
**குலமா குணமா**

**லிடோ** யாழ் நகர்
போன் 7698 தினசரி 4 காட்சிகள்
**அன்பு எங்கே?**
(புதிய பிரதி)


# இன்றைய பலன்

**ஆவணிமாதம் 29ம் திகதி வெள்ளிக்கிழமை**
**[14-9-1979]**

**மேடம்:** வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பல வழிகளிலும் முயற்சி செய்வீர்கள், புதுமையான செய்திக்கும் இடமுண்டு. புதிய தொழில் துறையொன்றில் வாய்ப்புக் கிடைக்கும், முன்னேற்றத்திற்கும் இடமுண்டு.

**இடபம்:** வாய்வுக்கோளாறு உடல்நலத்தைப்பாதிக்கலாம், உணவு விடயத்தில் கவனம் தேவை. வியாபாரிகள் நஷ்டமடைவர், புதிய முதலீட்டைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** சுருக்கமாக இனித்தது இன்று வேம்பாகக்கசக்கக்கூடும், மனப்போராட்டங்களினால் வேதனைப்படுவீர்கள், அதிக முயற்சி எடுத்தாலும் அற்பஇலாபமே கிடைக்கும், முன்னெச்சரிக்கை வேண்டும்.

**கடகம்:** பிரச்சினைகள் பல இன்று நல்ல முடிவை அடையும், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும், பேச்சில் நிதானம் பெருமையைத்தரும்.

**சிங்கம்:** முன்னேற்றமான காரியங்களில் எதிர்பாராத தடைகள் ஏற்படலாம், சகோதரவழியால் சஞ்சலத்துக்கு இடமுண்டு, பூமிப்பிணக்குகளைத் தவிர்த்துக்கொள்ளவும், புதிய பணிகளில் தாமதம் ஏற்படும்.

**கன்னி:** ஆராய்ச்சிகளில் அதிக ஆர்வம் ஏற்படும், கலைஞர்களுக்கு முன்னேற்றம் தென்படும், வாகன உரிமையாளர்களின் ஆதாயம் பெருகும், தாய்வழிமூலம் தனவரவுக்கு இடமுண்டு.

**துலாம்:** நீண்டநாட்களின் பின்பு இன்று நிறைவான தினம், எதிர்பார்த்த பொருள் வந்துசேரும், பிரமச்சாரிகளின் வாழ்க்கையில் மாறுதல் காணக்கூடும், சுவையான சம்பவம் இடம்பெறும்.

**விருட்சிகம்:** குடும்பத்தவருடன் குறுக்குவழித்தகராறு தென்படும், உங்களைப்பற்றி புனைந்துரைகளைப் பரப்புவதற்கு சிலர் முற்படுவார்கள், அதிகபேச்சு ஆபத்துக்கு இடமளிக்கும், முடிந்தவரை மௌனம் சாதிக்கவும்.

**தனு:** வாழ்க்கை இன்று தேனாக இனிக்கும், சகலதுறைகளிலும் நல்ல மாறுதல்கள் உருவாகும், பிரிந்தவர்கள் மீண்டும் இணைவதற்கு இடமேற்படும், பெற்றோரின் உதவியும் கிடைப்பதற்கு இடமுண்டு.

**மகரம்:** நம்பிக்கை மோசடி நடக்கும், நண்பர்களும் காலைவாரி விடுவார்கள், தீர்க்கமான சிந்தனையே சிறப்பைத்தரும்.

**கும்பம்:** எண்ணிய கருமத்தில் இன்று வெற்றியுண்டு. புண்ணிய வழிகளில் பொருட்செலவு ஏற்படும், கண்ணியமான உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடலாம், வரவேற்கத்தக்கதினம்;

**மீனம்:** செய்தொழிலில் தடைகள் உருவாகும், மேலதிகாரிகளின் கழுகுப்பார்வை உங்கள்பக்கம் திரும்பும், சகோதரர் ஒருவருடன் பகைத்துக்கொள்ளவேண்டியும் ஏற்படலாம், நிதானம் நன்று.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை


**RIO** Jaffna Phone: 7607
Daily 4 Shows
**High Velocity**
From 18-9-79
Grand Release
ELEPHANT CALLED SLOWLY


# 'தோட்டப்பகுதி ஆசிரியர்களை நிரந்தரமாக்கவேண்டும்'

## த. ஆ. சங்கம் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

கஷ்டப்பிரதேசத்தை பிறப்பிடமாகக்கொண்ட பயிற்சி பெற்று வெளியேறுகின்ற சகல ஆசிரியர்களுக்கும் அவர்களது சொந்த இடங்களிலேயே நியமனம் வழங்கவேண்டும்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க யாழ் கிளை செயற்குழுக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, தாய்ச்சங்கத்திற்கு அனுப்புவதென முடிவுசெய்யப்பட்டது.

சங்கப் பணிமனையில் நடந்த இக் கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

[1] கடந்த காலங்களில் நடைபெற்றதுபோன்ற பயிற்சிக்கலாசாலைகளில் பயிற்சி பெற்று வெளியேறுகின்ற ஆசிரியர்களில் 5 வருடங்கள் வெளிமாவட்டச் சேவையை முடித்தவர்கள் அனைவருக்கும் அவர்களது சொந்த மாவட்டங்களிலேயே நியமனம் வழங்கப்படவேண்டும்.

தோட்டப்பாடசாலைகளில் இருந்து அரசாங்க நியமனம் பெற்ற ஆசிரியர்களின் தோட்டப் பாடசாலைச்சேவை 4 வருடங்களுக்கு ஒரு வருட அரசாங்க சேவையாக இதுவரை கணிக்கப்பட்டுவருகிறது இனிமேல் இது 2 வருடங்களுக்கு ஒரு வருடமாகக் கணிக்கப்படவேண்டும்.

1977ம் ஆண்டு ஜூன் மாதம் அரசாங்கம் பொறுப்பேற்ற தோட்டப் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களுக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்,

யாழ் மாவட்டத்தில் கடன் வழங்குசபைக்கு கடன்கேட்டு விண்ணப்பித்த ஆசிரியர்கள் கடன் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களது கடன் சீரானமுறையில் வழங்கப்பட சபையைக் கேட்டுக்கொள்ளவேண்டும்.

ஆசிரியர்களின் வருடாந்தச் சம்பள உயர்வு உரியகாலங்களில் வழங்கப்படாமல் இருப்பதால் அவை சீரானமுறையில் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தோட்டப்பாடசாலைகளில் இருந்துவந்து பயிற்சிபெற்று வெளியேறும் ஆசிரியர்களுக்கு ஜனவரி மாதம் தொடக்கம் அரசாங்க பாடசாலைகளில் நியமனம் கொடுக்கவேண்டும். (ம)

## பாராட்டு விழா

(சுழிபுரம்)

பொன்னாலை வரதராசப் பெருமாள் ஆலயத்தில் ஸ்ரீ மகாபாரத விரிவுரை செய்து வந்த யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் திரு எஸ் சுப்பிரமணியசர்மா நாளை இரவு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவிருக்கிறார்.

கோவில் அர்ச்சகர் சதாசிவ ஈஸ்வரசர்மா தலைமையில் நடைபெறும் இப்பாராட்டு விழாவில் பல பிரமுகர்கள் பாராட்டுரை வழங்குவார்கள் (ச)

## நெல்லியடி வங்கி

# அடைவுநகைகளை மீளளிக்க நடவடிக்கை

(உடுப்பிட்டி)

மூடப்பட்ட கட்டைவேலி-நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிராமிய வங்கியில் அடைவு நகைகளை மீளளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன;

இதன் பிரகாரம் இம்மாதம் 17ம் திகதியும், அடுத்தமாதம் 8ம், 19ம் திகதிகளிலும் நவம்பர் மாதம் 5ம், 16ம் திகதிகளிலும் பாவனையாளர்கள் தமது அடைவு நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று இடைலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடனுதவி முகாமையாளர் திருமதி இ. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார்;

இக்கால எல்லை தவிர்ந்த எக்காரணம் கொண்டும் கிராமிய வங்கி திறந்துவைக்கப்படாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சந்தேக நபருக்கு பிணை அனுமதி

(பண்டத்தரிப்பு)

வீதியால் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வழிப்போக்கர் ஒருவரை வழிமறித்து அவரிடமிருந்த 260 ரூபா பணத்தையும் மற்றும் பிடவைகளையும் கொள்ளையடித்ததாகக் குற்றம் சாட்டி மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த பனிப்புலம் வாசியான சி. தர்மராசா என்பவரை மாவட்ட நீதிபதி திரு எஸ். ஆனந்தகுமாரசாமி 1000 ரூபா ரூபா உறுதிப் பிணையில் செல்ல அனுமதி வழங்கினார். மறுவிசாரணை அடுத்த ஜனவரி மாதம் 8-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி சோ. தேவராஜா ஆஜரானார். (இ)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

விடைகளைத் தெளிவாக எழுதி உங்கள் பாடசாலைப் பெயருடனும், வகுப்பாசிரியரின் கையெழுத்துடனும், 'ஈழநாடு' கேள்விக் கூப்பனுடன் சேர்த்து பின்வரும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும். பரிசுகள் பற்றிய அறிவிப்புகள் பின்னர் தரப்படும்.
ரோட்டேறியன் டாக்டர் பா. சோ. பாரதி, பல் வைத்தியசாலை, 568, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போட்டி முடிவு திகதி: 6-10-79

**யாழ். ரோட்டரிக் கழக மாணவர் சுகாதாரப் போட்டிக் கூப்பன்**

மாணவனின் முழுப்பெயர்......................
விலாசம்...........................
பாடசாலைப் பெயர்..........................
வகுப்பாசிரியரின் கையொப்பம்......................
..............................
மாணவனின் கையொப்பம்

# வெளிநாடு செல்லும் இலங்கைப் பிரஜைகளுக்கு சில சலுகைகள்

[யாழ்ப்பாணம்]

வெளிநாடு செல்லும் இலங்கைப் பிரஜைகளுக்குச் சுங்க இலாகாவின் கட்டுப்பாட்டிலிருந்து மேலும் சலுகைகளிக்கப்பட்டதுடன் சில தடைகளும் நீக்கப்பட்டுள்ளன.

அந்நியச் செலாவணிக் கட்டுப்பாட்டாளர் சுங்கப் பகுதியினருக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் சில சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது!

தற்காலிகமாக வெளிநாடு செல்லும் இலங்கைப் பிரஜைகள், 30,000 ரூபாவிற்கு மேற்படாத தங்க நகைகளைச் சொந்தத் தேவைக்காக எடுத்துச் செல்லலாம்.

தட்டச்சு இயந்திரம், வானொலிப்பெட்டி, சைக்கிள் ஆகியவற்றைக் கொண்டுசெல்ல தற்கு முன்பு தடைவிதிக்கப்பட்டிருந்தது. தற்போது அத்தடை நீக்கப்பட்டு, சொந்தப் பாவிப்புக்கு அவற்றைக் கொண்டுசெல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு உற்பத்திப் பொருட்கள், நன்கொடையாகவோ, ஏற்றுமதி செய்யவோ 1,000 ரூபாவிற்குட்பட்டுக் கொண்டுசெல்லலாம்.

1,000 ரூபாவிற்கு மேற்படாத வர்த்தகப் பொருட்கள் கொண்டுசெல்லவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. [ஈ]

# ரூ. 80 ஆயிரம் கஞ்சா மூடைகள் அகப்பட்டன!

[கொழும்பு]

புறக்கோட்டையில் 80 ஆயிரம் ரூபா பெறுமதியான கஞ்சாவைப் போதை வஸ்துத் தடுப்புப் பொலிஸார் கைப்பற்றினர்.

இது தொடர்பாக ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புறக்கோட்டையில் உள்ள தனியார் களஞ்சிய அறையொன்றிலிருந்தே 1,300 ரூத்தல் கஞ்சாவைப் போதைவஸ்துத் தடுப்புப் பிரிவினர் புறக்கோட்டைப் பொலிஸாரின் உதவியுடன் கைப்பற்றினர்.

இக்கஞ்சாவுக்குச் சொந்தமான முதலாளி ஒருவரைத் தேடிப் பொலிஸார் வலைவிரித்துள்ளனர். [இ]

# இந்தியாவிலிருந்து கடத்திவரப்பட்ட பீடி இலைகளை பொலிசார் கைப்பற்றினர்

[யாழ்ப்பாணம்]

இந்தியாவிலிருந்து கடத்தி வரப்பட்டதாகக் கூறப்படும் 1,842 கிலோ நிறையுள்ள 34 மூடை பீடி இலைகளை, உடுப்பிட்டியிலுள்ள வீடொன்றில் பொலிஸார் கைப்பற்றினர்

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து பொலிஸார் அவ்வீட்டைச் சுற்றிவளைத்துச் சோதனையிட்டனர் அப்போது பீடி இலை மூடைகள் சிக்கின.

பீடி இலை மூடைகள் காங்கேசன்துறைச் சுங்க இலாகாவிடம் ஒப்படைக்கப்பட்டன

உதவிச் சுங்கச் சேகரிப்பாளர் திரு. எஸ். எம். ஜே. சேனரத்ன விசாரணை நடத்தி, அவ்வீட்டு உரிமையாளர் ஒருவருக்கு 10,090 ரூபாவும், மற்றொருவருக்கு 1,000 ரூபாவும் அபராதம் விதித்தார்.

பீடி இலைகள் யாருக்குச் சொந்தமானதென்பது பற்றித் தற்போது விசாரணை நடத்தி வருகின்றனர்.

பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. சந்திரகுணவர்த்தன தலைமையில் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் திரு இ. திலீநாதன், திரு பண்டார திரு கருணாரத்ன ஆகியோரைக் கொண்ட கோஷ்டியினரே இக்கடத்தல் பொருட்களைக் கைப்பற்றினர். [ஈ]

# புளியங்கூடலில் சிறுவர் விழா

(வேலணை)

புளியங்கூடல் மகாமாரி சனசமூகநிலையத்தினர் சர்வதேச சிறுவர் ஆண்டை முன்னிட்டு நடத்தும் சிறுவர் விழா இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது

பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்படும் கட்டுரைப் போட்டி இன்று நடராசா வித்தியாசாலை மண்டபத்திலும், பேச்சுப் போட்டிகள் நாளை சனிக்கிழமை சனசமூகநிலைய மண்டபத்திலும் நடைபெறவுள்ளன சிறுவர் தொடர்பான கருத்தரங்கும், பரிசளிப்புவிழாவும் 16ந் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். [கு]

# கிளிநொச்சியில் மகாதேவ சுவாமிகள் ஜெயந்தி விழா

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சி ஜெயந்திநகர் மகாதேவா ஆச்சிரமத்தில் ஸ்ரீலஸ்ரீ மகாதேவ சுவாமிகளின் ஜெயந்தியும், ஆச்சிரமத்தின் 22வது ஆண்டு நிறைவு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை, அருட்திரு வடிவேல் சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ளது.

காலையில் விசேஷ அபிஷேகங்களும், மாலையில் காதாப்பிரசங்கங்களும், இசைநிகழ்ச்சியும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. [செ-கு]

# மருந்து இல்லை

[சித்தன்கேணி]

வட்டுக் கோட்டை அரசினர் வைத்தியசாலையில் பல மாதங்களாக ஊசி மருந்து, மருந்து வகைகள் இல்லாமல் இருந்து வருகின்றது வைத்திய அதிகாரி நோயாளிகளுக்கு ஊசி மருந்து, மருந்துகள் இல்லை என்று சொல்லி, இருக்கும் மருந்துகளை கொடுத்து அனுப்புகின்றார். நோயாளிகள் இதனால் பெரிதும் பாதிப்படைகின்றனர். இதுபற்றி வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் திரு அ. திருநாவுக்கரசுவிடமும் பொது மக்கள் பலமுறை புகார் செய்திருந்தும் எதுவித பலனும் கிட்டவில்லை. [இ]

# நெல்லுக்கும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேற்படும் சிரமங்களையும் கவனத்திற்கொள்ளவேண்டுமென்றும் எவரையும் பாதிக்காத வகையில் விலை நிர்ணயிக்கப்படுமென்றும் கூறினார்.

அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது!

"நாட்டிலுள்ள சகல முக்கிய பட்டினங்களிலும் அடுத்த மாதம் தொடக்கம் வர்த்தகக் கண்காட்சிகள் நடாத்தப்படும். வர்த்தக நடவடிக்கைகளில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் நியாயமான முறையில் சிறந்த பொருட்கள் விற்பனை செய்வதற்காகவுமே இக்கண்காட்சிகள் நடாத்தப்படவுள்ளன.

"நாட்டின் சகல பகுதிகளையும் பாரபட்சமின்றி அபிவிருத்திசெய்வதே அரசின் நோக்கம். போதிய நீர் மின்சக்தி போக்குவரத்து வசதிகள் போன்றவற்றை ஏற்படுத்திக்கொடுப்பதில் ஏனைய மாவட்டங்களைப் போலவே மன்னாருக்கும் முதலிடம் அளிக்கப்படும்" என்றும் அமைச்சர் உறுதியளித்தார்.

மன்னாரிலும் முருங்கனிலும் சந்தைப்படுத்தும் திணைக்கள விற்பனை நிலையங்களையும் அமைச்சர் திறந்துவைத்தார். [கு]

# எழுப்புதற் கூட்டங்கள்

[கரியாலை]

பருத்தித்துறை மெதடிஸ்த தேவாலயத்தில் எழுப்புதற் கூட்டங்கள் இன்று ஆரம்பமாகி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவிருக்கின்றன

எழுப்புதற் கூட்டங்களில் வடபகுதி மெதடிஸ்த திருச்சபையின் தலைவர் அருட்திரு எஸ். டபிள்யூ. அரியராசா அடிகளார் அருளுரை நிகழ்த்துவார்.

நாளை மாலை நடைபெறும் வாலிபர்-சிறுவர் விழாவில் அருட்திரு ஜோன் ஜயாசா அடிகளும், அருட்திரு டி. வி. இரத்தினசிங்கம் அடிகளும் அருளுரை நிகழ்த்துவார்கள்.


## மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்கம் - மானிப்பாய்

## பிராமணப் பிள்ளைகளுக்கு குருகுலப் பயிற்சி

சைவ ஆலயங்களின் பலவற்றில் அநேக முறையீனங்களும் குறைபாடுகளும் காணப்படுகின்றன இவற்றிற்கு முக்கிய காரணங்களில் ஒன்று, போதிய சமய அறிவும், சைவக் கிரியைகளைப்பற்றிய விளக்கமும், பயிற்சியுமுள்ள பூசகர்களினதும், ஆச்சாரியர்களினதும் பற்றாக்குறையாகும். இதை உணர்ந்த எங்கள் சங்கம் நல்ல பூசகர்களையும், ஆச்சாரியர்களையும் உருவாக்கத் தீர்மானித்துள்ளது.

முதற்படியாக, தராதரமுள்ள பிராமண இளைஞர்களைத் தெரிந்தெடுத்து, ஒரு குருகுலத்தில் சேர்த்து, மூன்று அல்லது நான்கு வருடங்களுக்கு அவர்களின் குருகுலப் பயிற்சிக்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்தி உதவத் தீர்மானித்துள்ளது தேர்ந்த மாணவர்களின் தராதரம், அவர்களின் குடும்ப நிலைமை மற்றும் வேண்டியவற்றை ஆராய்ந்து, அவற்றிற்கேற்றபடி சன்மானம் மாதாமாதம் ரூபா 100/- முதல் 150/- வரை இப்பயிற்சிக் காலத்தில் வழங்கப்படும்.

"பிராமண இளைஞர்" சமுதாயத்தினர் இவ்வித பயிற்சியில் எவ்வளவு ஆர்வமுடையோராயிருக்கின்றனரென்பதில்தான் எமது தீர்மானத்தின் வெற்றியும் பயனும் தங்கியிருக்கிறது இதில் ஆர்வம் எவ்வளவு உள்ளது என்பதை அறியவே கீழ் காணும் விளம்பரம் பிரசுரிக்கப்படுகிறது.

### குருகுலப் பயிற்சி

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரணதர) பரீட்சையில் தமிழில் திறமைச் சித்தி பெற்ற 'பிராமண இளைஞர்களிடமிருந்து மேலே குறிப்பிட்ட பயிற்சிக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது.' விண்ணப்பதாரர்கள் சமஸ்கிருத மொழியில் பயிற்சி பெற்றிருந்தால் அது விசேஷ தகைமையாகக் கொள்ளப்படும்.

செயலாளர்,
மருதடி விநாயகர் ஆலய
வழிபடுவோர் சங்கம்,
சண்முக நிவாசா,
மானிப்பாய்

என்னும் விலாசத்துடன் எழுத்துமூலம் தொடர்பு கொண்டு விண்ணப்ப பத்திரங்களை பெற்றுக்கொள்ளவும்.

குறிப்பு:-

பயிற்சியின் பின், ஒரு பரீட்சை நடாத்தப்படும் இப்பயிற்சியில் விசேட சித்தியடைபவர்கள், ஆச்சாரியாபிஷேகம் பெறத் தகுதி உடையவர்களாகவும், சாதாரண சித்தியடைபவர்கள் ஆலய பூசகர்களாகக் கடமையாற்றத் தகுதியுடையவர்களாகவும் கணிக்கப்படுவர். இவர்களின் தராதரத்திற்கேற்றபடி மாதாமாதம் நல்ல வேதனமும் இலவச இருப்பிடமும் உள்ளடக்கிய பலவித சௌகரியங்களுடன் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் பணிபுரியும் வாய்ப்புகளில் அமர்த்தப்படுவதற்கு எமது சங்கம் உத்தரவாதம் அளிக்கும்.

செயலாளர்,
மருதடி விநாயகர் ஆலய
வழிபடுவோர் சங்கம்.

மானிப்பாய்,
11-6-79. 3580



## மரண அறிவித்தல்

திருமதி அன்னம்மா ஆறுமுகம்

"யாழ்ப்பாணம் 11, பலாலி வீதியைச்சேர்ந்த திருமதி அன்னம்மா ஆறுமுகம் காலமானார் இவர் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் மனைவியும், சிவராசா (இலங்கை துறைமுக அதிகார சபை- கொழும்பு; கருணாநிதி (வெளிநாடு), ஆனந்தராஜா (விலைமதிப்பு திணைக்களம் யாழ்ப்பாணம்), கமலராணி, சந்திரராணி; ஆகியோரின் அன்புத்தாயாரும் தங்கராஜாவின் மாமியுமாவார். அன்னாரது ஈமைக்கிரியைகள் இன்று (14-09-79) வெள்ளிக்கிழமை பகல் 3 00 மணிக்கு நடைபெறும். 3593



## மரண அறிவித்தல்

திரு. R. C. தர்மரத்தினம்

இளைப்பாறிய மாவட்டக்காணி அதிகாரி திரு R. C தர்மரத்தினம் காலமானார். இவர் மதியின் அன்புக் கணவரும் டாக்டர் சந்திரா, சூரி (கணக்காளர் இங்கிலாந்து), விஜி (இங்கிலாந்து) ஆகியோரின் தந்தையும், காப்டன் யோகேந்திரன். வேதாஸன் பொறியியலாளர் (இங்கிலாந்து) ஆகியோரின் மாமனாரும் ஆவார் பூதவுடல் நாளை 15-9-79 சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் 77, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து செம்மணி மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். 3591



## மரண அறிவித்தல்

### சட்டத்தரணி ஆறுமுகம் திருஞானசோதி

கொழும்புத்துறை சுவாமியார் வீதியைச் சேர்ந்த சட்டத்தரணி ஆறுமுகம் திருஞானசோதி காலமானார். இவர் கணேஷானந்த நாயகியின் அன்புக்கணவனும் பாலஜோதி (ரஷ்யா), பாலமேகலா (ஆசிரியை சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் தந்தையும், பசுபதி (யாழ். வளாகம்) யின் மாமனும், டாக்டர் விக்னேஸ்வரனின் (சுண்ணாகம்) மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை சனிக்கிழமை (15-9-79) காலை 9-30 மணிக்கு சுவாமியார் வீதி, கொழும்புத்துறையில் உள்ள அவரது இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

3592


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: GB/8948/78 The Eelanadu P B No. 49, Telegram Eelanadu, T Phone 389.